**<u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>**

**<u>CC No.32/2026</u>**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw4/Pw2 |
| Name | : ராமசந்திரன் |
| Father/Husband's Name | : பெருமாள் |
| Village | : வண்டலூர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.06.2026.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். புகார் தாரர் சுப்பம்மாள் எனக்கு எதிர் வீட்டில் குடியிருக்கிறார். அவர் என்னுடைய அத்தை. எந்த காரணத்திற்காக புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது**

இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்றாலும், போலீசாரிடம் வழக்கின் சம்பவத்தை பற்றி வாக்குமூலம் கொடுத்துவிட்டு

தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.32/2026**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw10/Pw3 |
| Name | : மகேந்திரன் |
| Father/Husband's Name | : மாரிமுத்து |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22.06.2026.

A1, A2 absent.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தாம்பரம் மாநகர சைபர் கிரைமில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.05.2025ம் தேதி ஓட்டேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் நான் மருத்துவமனைக்கு சென்று புகார் தாரர் சுப்பம்மாள் என்பவரின் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 16.00 மணியளவில் புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 448/2025, பிரிவுகள் 296(b), 118(1) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ.2 மற்றும் 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பிறகு சம்பவ இடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் சாட்சிகள் புருகாநுதின் மற்றும் லோகேஷ் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் முறையே **அதசா.ஆ.4 மற்றும் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.06.2025 ம் தேதி இரண்டு எதிரிகளையும் கைது நிலைய ஜாமீனில் விடுவித்தேன். சாட்சிகள் 1–7 ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். குரோம்பேட்டை அரசு மருத்துவர் வித்யா என்பவரிடம் இருந்து விபத்து பதிவேடு பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.06.2025 ம் தேதி கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை மருத்துவர் அக்னிராஜ் என்பவரை விசாரித்து புகார் தாரரின் காயச்சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்றிதழில் புகார்தாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று வழங்கிய அறிக்கை பெற்றேன். அந்த காயச்சான்றிதழ் **அதசா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயச்சான்றிதழ் அடிப்படையில் இவ்வழக்கின் பிரிவுகள் 296(b), 118(1) BNS இருந்து 296(b), 118(2) BNS ஆக பிரிவு மாற்றம் செய்யப்பட்டது.அந்த பிரிவு மாற்றுதல் அறிக்கை **அதசா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளில் 19.06.2025 ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் தாரரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்குக்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டது என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu